# வரவு செலவுத் திட்டக் குழு நிகழ்வு - 2025

## எல்லை நிர்ணய ஆணைக்குழு

## முன்னேற்ற அறிக்கை

**(2024.01.01.- 2024.12.31)**

# எல்லை நிருணய ஆணைக்குழு - முன்னேற்ற அறிக்கை

**2024 ஜனவரி மாதம் 01 ஆந் திகதி முதல் 2024 திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி வரை**

## 1.0 பின்னணி

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 41(1) ஆம் உறுப்புரைக்கு அமைய கௌரவ ஜனாதிபதி அவர்களினால் 2023.05.19 ஆந் திகதி, மூன்று வருட காலத்திற்கு எல்லை நிருணய ஆணைக்குழு நியமனம் செய்யப்பட்டது. அதன் தவிசாளரும் உறுப்பினருமாக கலாநிதி கே. தவலிங்கம் அவர்களும், ஏனைய இரு உறுப்பினர்களாக கலாநிதி திருமதி அனிலா டயஸ் பண்டாரநாயக்க அவர்களும், திரு எம். ஐ. அமீர் அவர்களும் நியமனம் செய்யப்பட்டனர்.

அரசியலமைப்பின் 95 மற்றும் 96 ஆம் உறுப்புரைகளில் ஆணைக்குழுவின் பிரதான பணிகள் குறிப்பிடப்பட்டுள்ளன. எவ்வாறாயினும் பிற ஆணைக்குழுக்கள் போலன்றி, இவ்வெல்லை நிருணய ஆணைக்குழு தொடர்பில் பின்வரும் விடயங்கள் அரசியலமைப்பிலே குறிப்பிடப்படவில்லை.

- ஆணைக்குழுவின் பணிகள்
- ஆணைக்குழுவின் அதிகாரங்கள்

ஒரு புதிய அரசியலமைப்பை உருவாக்கின்ற சந்தர்ப்பத்தில் அல்லது அரசியலமைப்பைத் திருத்தியமைக்கின்ற போது தனியானதொரு எல்லை நிருணய ஆணைக் குழுவை நிறுவுவதற்கும், அதன் பொறுப்புகள் பற்றி விபரிக்கும் போது சகல புவியியல் எல்லைகளையும் நிருணயிப்பதை தத்துவார்த்தமாக்குவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது. இந்நோக்கத்திற்காக, ஆணைக்குழுவிற்கு அதிகாரங்களை வழங்குகின்ற ஒரு சட்டம் நிறைவேற்றப்பட வேண்டுமென்பதோடு, அது தற்போது வரைவு செய்யப்பட்டு அடுத்த கட்ட நடவடிக்கைக்காக ஜனாதிபதியின் செயலாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

**2.0 தொலைநோக்கு** :- நெறிமுறை சார்ந்த மற்றும் நியாயமான கொள்கைகளின் அடிப்படையில் எல்லை நிருணயப் பணிகளை ஆற்றுவதில் உன்னதநிலையை அடையப்பெறல்.

**பணிக்கூற்று** :- அரசியலமைப்புச் சட்டத்தினால் அதிகாரமளிக்கப்பட்டுள்ளவாறு சுயாதீனமாகவும், நெறிமுறையாகவும், வினைத்திறனாகவும், வெளிப்படையாகவும், நம்பகத்தன்மையுடனும், சட்டத்திற்குட்பட்டும் எல்லை நிருணயங்களை மேற்கொள்ளல்.

**குறிக்கோள்கள்**

- ஒவ்வொரு வாக்காளருக்கும் அல்லது பிரஜைக்கும் மிக உயர்ந்த, சமமான பிரதிநிதித்துவம் கிடைக்கத்தக்கதாக, மக்களின் ஜனநாயக உரிமைகள் மற்றும் அச்சூழமைவுகளைப் பாதுகாப்பானதும் வினைத்திறன் மிக்கதுமான விதத்தில் உறுதி செய்வதற்குமாக தேர்தல் மாவட்டங்கள் மற்றும் பிற நிருவாக அலகுகளின் எல்லைகளை நிருணயம் செய்தல்.
- தேர்தல் மாவட்டங்கள் அல்லது நிருவாகப் பிரதேசங்கள் அல்லது கல்வி, சுகாதாரம் அல்லது பாதுகாப்பு போன்ற சமூக-பொருளாதார சேவைகளுக்கான நிருணயங்களை மேற்கொள்வதற்கென ஒப்படைக்கப்படுகின்ற எல்லை நிருணயப் பணிகளை வரையறுக்கப்பட்ட காலப்பகுதிக்குள் முடித்தல்.
- அரசாங்கத்திற்கும் மற்றும் பிற நிறுவனங்களுக்கும் சுயமுடிவுகளை எடுப்பதற்குத் தேவையான எல்லை நிருணயங்களின் போது உரிய அறிவையும் தகவல்களையும் வழங்குதல்.
- எல்லை நிருணயம் தொடர்பான தகவல்கள் மற்றும் உரிய ஆவணங்களைத் திரட்டுகின்ற மத்திய நிலையமொன்றை நிறுவுதல்.

**03**. **செயற்பாடுகள்**

**3.1 எல்லை நிருணய ஆணைக்குழுவின் கூட்டங்கள்**:- 2024.01.01 ஆந் திகதி முதல் 2024.12.31 ஆந் திகதி வரை 12 கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன.

10 ஆம்கூட்டம் – 2024.01.10
11 ஆம்கூட்டம் – 2024. 02.12
12 ஆம்கூட்டம் – 2024.03.14
13 ஆம் கூட்டம் – 2024.04.17
14 ஆம் கூட்டம் – 2024.05.14
15 ஆம்கூட்டம் – 2024.06.19
16 ஆம்கூட்டம் – 2024.07.17
17 ஆம் கூட்டம் – 2024.08.20
18 ஆம்கூட்டம் – 2024.09.25
19 ஆம்கூட்டம் – 2024.10.23
20 ஆம்கூட்டம்– 2024.11.22
21 ஆம்கூட்டம் – 2024.12.16

**3.2 எல்லை நிருணயப் பணிகள் தொடர்பாக அது பற்றிய ஆர்வம் காட்டுகின்ற தரப்பினர்களை அறிவூட்டுவதற்காக ஆணைக்குழு உறுப்பினர்களால் துண்டுப் பிரசுரங்கள் தயாரிக்கப்படல்**.

எல்லை நிருணயம் தொடர்பாகமக்களை அறிவூட்டுவதற்காக வினாக் கொத்தொன்றாக மும்மொழிகளிலும் தயாரிக்கப்பட்ட துண்டுப் பிரசுரமொன்று மக்களிடையே பகிர்ந்தளிப்பது தொடர்பாக ஆணைக் குழுவின் கவனம் ஈர்க்கப்பட்டதோடு, ஆணைக் குழுவின் உறுப்பினர்களால் அத்தகைய வினாக் கொத்தொன்று 2 துண்டுப் பிரசுரங்களாகத் தயாரிக்கப்பட்டன. அதன் முதலாவது துண்டுப் பிரசுரத்தினை அச்சிடுவதற்காக IRES நிறுவனம் முன் வந்தது. PAFFREL நிறுவனமும் அதற்காக முன் வந்தது. ஆயினும் 2024 செப்தெம்பர் மாதம் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல் காரணமாக, அப்பணிகளை ஒத்தி வைக்க வேண்டி வந்தது. எதிர்காலத்தில் அவற்றை அச்சிடுவதற்காக அந் நிறுவனங்களின் அனுசரணையைப் பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கப்படுகிறது.

**3.3 தேர்தல் சட்ட திருத்தங்களுக்கான முன்மொழிவுகளை சமர்ப்பித்தல்**

தேர்தல் சட்ட திருத்தத்திற்கான பரிந்துரைகளை சமர்ப்பிப்பதற்காக நியமனம் செய்யப்பட்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவுக்கு எமது ஆணைக்குழுவால் 2023.12.04 ஆம் தேதி சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுகள் தொடர்பான விடய விளக்கமளிப்பை மேற்கொள்வதற்காக தேர்தல் சட்ட திருத்தங்களுக்கான

பரிந்துரைகளை சமர்ப்பிப்பதற்கான ஜனாதிபதி விசாரணைக் குழுவின் அழைப்பின் பேரில், 2024.06.04 ஆம் தேதி அவ்வாணைக் குழுவுக்கு தவிசாளரின் தலைமையில் எல்லை நிருணய ஆணைக்குழுவின் விடயங்கள் முன்வைக்கப்பட்டன. அவ்வாணைக்குழுவின் அறிக்கை ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ளது.

### 3.4 தேர்தல்களில் ஆண்களும் பெண்களும் சமமாகக் கருதப்பட வேண்டியதன் தேவைப்பாடு

தேர்தல்களில் ஆண்களும் பெண்களும் சமமாகக் கருதப்பட வேண்டியதன் தேவைப்பாடு தொடர்பாக சிங்களம், தமிழ் ஆகிய மொழிகளில் ஆக்கமொன்று தயாரிக்கப்பட்டு, தேர்தல் ஆணைக்குழுவின் வருடாந்த ஆய்வு அமர்வுக்காக சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டுமென ஆணைக்குழு தீர்மானித்ததோடு, அதனைத் தயாரிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது. ஆயினும் *2024* செப்தெம்பர் மாதம் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல் காரணமாக, அவ்வாய்வு அமர்வு ஒத்தி வைக்கப்பட்டமையினால் உரிய ஆக்கத்தை சமர்ப்பிக்க முடியாமல் போயிற்று.

## 4. நிருவாக ரீதியான விடயங்கள்

### 4.1 எல்லை நிருணய ஆணைக்குழுவிற்கான அலுவலக வசதிகள்

எல்லை நிருணய ஆணைக்குழுவின் அலுவலகத்தை கொழும்பு 5, நாரஹேன்பிட்ட, நில அளவைத் திணைக்கள கட்டிடத் தொகுதியின் ஒரு பகுதியில் வாடகை செலுத்தாமல் நடாத்திச் செல்வதற்கு நில அளவையாளர் அதிபதி அனுமதியளித்துள்ளார்.

**தற்போதைய அலுவலக முகவரி :**

எல்லை நிருணய ஆணைக்குழு,
நில அளவையாளர் அதிபதியின்
அலுவலகக் கட்டிடம்,
தபால்பெட்டிஇலக்கம் 506,
கொழும்பு 05.

## 4.2 போக்குவரத்து நடவடிக்கைகள்

எல்லை நிருணய ஆணைக்குழுவுக்கு 2016 ஆம் ஆண்டில் இலக்கம் CAP 7180 என்ற மோட்டார் வாகனம் மற்றும் இலக்கம் CAR 0347 என்ற மோட்டார் வாகனம் என்பன வழங்கப்பட்டதோடு, அந்த மோட்டார் வாகனங்கள் இரண்டும் ஜனாதிபதியின் செயலாளரின் பெயரின் கீழ் பதிவு செய்யப்பட்டிருந்தன. வாகனங்கள் இரண்டினதும் உரித்துரிமை எல்லை நிருணய ஆணைக் குழுவின் செயலாளரின் பெயருக்கு 2024.05.28 ஆம் தேதி உரிமை மாற்றம் செய்யப்பட்டதோடு,.இலக்கம் CAP 7180 என்ற மோட்டார் வாகனம் தவிசாளருக்காக குறித்தொதுக்கப்பட்டுள்ளது. CAR 0347 என்ற மோட்டார் வாகனம் ஆணைக் குழுவின் குழாத்துக்கு இணைக்கப்பட்டுள்ளது. இவ்வாகனங்கள் எல்லை நிருணய ஆணைக் குழுவின் கடமைப் போக்குவரத்துப் பணிகளுக்காக தொடர்ந்தும் பயன்படுத்தப்படுகின்றன.

## 4.3 எல்லை நிருணய ஆணைக்குழுவின் பணிக்குழாத்தை நியமனம் செய்தல்

எல்லை நிருணய ஆணைக்குழுவிற்கு பொறுப்புவிக்கப்பட்டுள்ள கடமைப் பணிகளின் பாரிய பொறுப்பைக் கருத்தில் கொண்டு, பின்வரும் நியமனங்கள் முகாமைத்துவ சேவைகள் பணிப்பாளர் நாயகத்தால் 2016.02.05 ஆந் திகதிய மற்றும் DMS/1029 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

| பதவி | மட்டம் | பதவிகளின் எண்ணிக்கை | சம்பளக் குறியீடு |
|---|---|---|---|
| செயலாளர் | சிரேஷ்ட மட்டம் | 01 | SL-3-2006 |
| கணக்காளர் | சிரேஷ்ட மட்டம் | 01 | SL-1-2006 |
| இணைப்புச் செயலாளர் | மூன்றாம் நிலை மட்டம் | 01 | பொ நி.சு.2006/6 |
| நிருவாக உத்தியோகத்தர் | மூன்றாம் நிலை மட்டம் | 01 | MN-7-2006 |
| மொழிபெயர்ப்பாளர் | இரண்டாம் நிலை | 03 | MN-6-2006 |
| தகவல் தொழில்நுட்ப உதவியாளர் | இரண்டாம் நிலை | 02 | MT-1-2006 |
| அரச முகாமைத்துவ உதவியாளர் | இரண்டாம் நிலை | 02 | MN-2-2006 |
| சாரதி | ஆரம்ப நிலை மட்டம் | 02 | PL-3-2006 |
| அலுவலக உதவியாளர் | ஆரம்ப நிலை மட்டம் | 02 | PL-1-2006 |
| மொத்தம் | | 15 | |

2024.12.31 ஆந் திகதியன்று சேவையில் ஈடுபட்டுள்ளவர்களின் எண்ணிக்கை வருமாறு.

| **பதவி** | **அங்கீகரிக்கப்பட்ட** | **நிரப்பப்பட்ட** | **வெற்றிடங்கள்** |
|---|---|---|---|
| செயலாளர் | 01 | [a] 01 | - |
| கணக்காளர் | 01 | [a] 01 | - |
| இணைப்புச் செயலாளர் | 01 | 01 | - |
| நிருவாக உத்தியோகத்தர் | 01 | 01 | - |
| மொழிபெயர்ப்பாளர் | 03 | 0 | 03 |
| தகவல் தொழில்நுட்ப உதவியாளர் | 02 | 0 | 02 |
| அரச முகாமைத்துவ உதவியாளர் | 02 | 02 | - |
| சாரதி | 02 | 02 | - |
| அலுவலக உதவியாளர் | 02 | 02 | - |
| மொத்தம் | 15 | 09 | 05 |

a -பதிற்கடமையாற்றுபவர்கள்

- செயலாளர் பதவியில் பதில் கடமை ஆற்றுவதற்காக நில அளவைத் திணைக்களத்தின் மேலதிக நில அளவையாளர் அதிபதி (நிருவாகம் மற்றும் மனித வளம்) திரு.அநுர முதுமால 2024.02.21 ஆந் திகதி முதல் 2025.02.21 ஆந் திகதி வரையிலான ஒரு வருட காலத்திற்கு அல்லது செயலாளர் பதவிக்காக நிரந்தர உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்படும் நாள் வரை ஆகிய இரண்டு திகதிகளில் முதலாவதாக வருகின்ற திகதி வரை எல்லை நிருணய ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

- கணக்காளர் பதவியில் பதில் கடமையாற்றுவதற்காக அரசாங்க சேவை ஆணைக்குழுவின் காப்பு அனுமதிக்குட்பட்டு, நிரந்தர பதவிக்குரிய கடமைகளுக்கு மேலதிகமாக, 2023.07.01 ஆம் தேதி முதல் ஒரு வருட காலத்திற்கு கணக்காளராக கடமையாற்றிய கணக்காளர் திரு. ஈ. ஜீ. எஸ். சிசிர குமார நியமனம் செய்யப்பட்டதோடு, 2024.07.01 ஆம் தேதி முதல் 2025.06.30 ஆம் தேதி

வரையிலான ஒரு வருட காலத்திற்கு அரச சேவை ஆணைக் குழுவின் காப்பு அனுமதிக்குட்பட்டு மீண்டும் ஒருமுறை கணக்காளர் பதவியில் பதில் கடமையாற்றுவதற்காக நியமனம் செய்யப்பட்டுள்ளார்

**5.நிதியியல் விடயங்கள்**

- நிதி ஒதுக்கீட்டுச் சட்டத்திற்கமைய, 2024 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீடு 18.16 மில்லியன் ரூபாக்களாகும். இதில், 17.86 மில்லியன் ரூபாக்கள் மீண்டெழும் செலவினமாகவும், 0.3 மில்லியன் ரூபாக்கள் மூலதனச் செலவினமாகவும் இருந்தன.
- மீண்டெழும் ஒதுக்கீட்டுத் தொகையில் 15.29 மில்லியன் ரூபாக்கள் திசெம்பர் மாத இறுதி வரை செலவிடப்பட்டுள்ளதுடன், மூலதனச் செலவினம் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.